பக்கங்கள் 19+2

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 28 ஞாயிற்றுக்கிழமை 14.12.2025 | அதிர்வு 137

## புயலுக்கு 643 பேர் பலி 284 பேரைக் காணோம்

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 643 ஆக அதிகரித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பேரிடர் நிவாரண நடவடிக்கைகளில் ஜே.வி.பியினர் முறையற்ற தலையீடு

## தென்னிலங்கையில் பலத்த குற்றச்சாட்டு

பேரிடர் நிவாரண விநியோக நடவடிக்கைகளில் அரசாங்க அரசியல்வாதிகள் தலையிடுகின்றனர் எனவும், தங்கள் ஆதரவாளர்களின் நலனுக்காக அரச நிவாரண நிதியைத் திருப்பி விடுகின்றனர் எனவும் முறைப்பாடுகள் ஏராளமாக எழுந்துள்ளன என்று கொழும்பின் பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்று தனது இன்றைய வார வெளியீட்டின் ஆசிரிய தலையங்கத்தில் பட்டவர்த்தனமாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

‘பேரிடர் நிவாரணமும் அதிர்ச்சியளிக்கும் குற்றச்சாட்டுகளும்’ என்ற தலைப்பில் அந்த ஆசிரிய தலையங்கம் 02▶

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடான சட்ட மூலம் தயாராம்!

கடந்த 47 வருடங்களாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கி மாற்றீடாக அரசு கொண்டுவர உத்தேசித்திருக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் இப்போது தயாராகி விட்டதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இப்போது முன்மொழியப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், பயங்கரவாதச் செயலைச் செய்பவர்களுக்கு மேல் நீதிமன்ற விசாரணைக்குப் பிறகு இருபது ஆண்டுகள் சிறைத் தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை கடுமையான தண்டனைகள் வழங்கப்படும்.



“பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் - எண். 2026” என்ற புதிய சட்டம் நீதி மற்றும் 02▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்




## பேரிடர் நிவாரண...

வெளியாகியுள்ளது.

''பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் ஒரு பெரிய இழப்பீட்டுத் தொகுப்பை அறிவித்துள்ளது. மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்தம் செய்வதற்கான பணத்தை வழங்கும் பணி ஏற்கனவே தொடங்கி உள்ளது. மக்களுக்குச் சொந்தமான நிதியையே அரசு செலவிடுகிறது. அந்த நிதி ஜே.வி.பியினுடையது அல்லது தேசிய மக்கள் சக்தியுனுடையது அல்ல. எனவே, அரச நிதியை பொறுப்புடன் வழங்குவது மட்டுமல்லாமல், அவ்வாறு செய்வதாகவும் காட்டப்படவும் வேண்டும். வெளிப்படைத்தன்மை என்பது அனைத்து வகையான நிதி முறைகேடுகளுக்கும் மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகும். அரசாங்க அரசியல்வாதிகள் நிவாரண விநியோக நடவடிக்கைகளில் தலையிடுகின்றனர் எனவும், தங்கள் ஆதரவாளர்களின் நலனுக்காக நிதியை திருப்பி விடுகின்றனர் எனவும் முறைப்பாடுகள் ஏராளமாக உள்ளன.'' – என்று அந்த நாளிதழ் தனது கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. – என்.பி.பி அரசியல்வாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் அனைத்து மட்டங்களிலும் நடைபெற்று வரும் பேரிடர் நிவாரணத் திட்டங்களில் தலையிடுகின்றனர் எனவும், கிராம சேவையாளர்களைக் கூடத் தடுக்கின்றனர் எனவும் இலங்கை ஐக்கிய கிராம சேவையாளர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றமையையும் அந்த நாளிதழ் மேற்கோள் காட்டியிருக்கின்றது.

அரசியல் அதிகாரத் தரப்பினர் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு கடிதங்களை அனுப்பி, அரசு நடத்தும் நலன்புரி மையங்களுக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களை நியமிக்க உத்தரவிட்டுள்ளனர் என்று அவர் கூறியமையும் அந்தத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு பிரஜாசக்தி குழுக்களின் அரசாங்க உறுப்பினர்களிடமிருந்து ஒப்புதல் பெறுமாறு அரச அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம சேவையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஜகத் சந்திரலால் தெரிவித்த விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம் கடந்த வியாழக்கிழமை, ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட இலங்கை கிராம சேவையாளர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சுமித் கொடிகார இதே போன்ற பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்.

தேசிய மக்கள் முன்னணி அரசியல்வாதிகள் தங்கள் ஆதரவாளர்கள் தலா ரூ.25,000 இழப்பீடு பெற தன்னிச்சையாக உதவுகின்றனர் என அவர் கூறினார். பேரிடர் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும், நிவாரணத் திட்டங்கள் ஒரு போதும் அந்த வகையில் அரசியலாக்கப்படக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் விசாரணைகளை கட்டாயப்படுத்த வேண்டிய அளவுக்கு அதிர்ச்சியளிப்பனவாகக உள்ளன என்று அந்த ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

பேரிடர் நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட அரசு நிதியை தவறாகப் பயன்படுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு பொது சொத்துக்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட வேண்டும். சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் ஆட்சியில் இருக்கும்போது எரிபொருள் உதவித்தொகையை மோசடியாகப் பெற்றமைக்காகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். எனவே, பேரிடர் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றம் தண்டிக்கப்படாமல் போகக்கூடாது – என்றும் அந்த ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

---

## பயங்கரவாத...

தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ளது, இது தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றும் நடவடிக்கையாகும்.

முன்மொழியப்பட்ட சட்ட மூலம் பயங்கரவாதக் குற்றத்தை "வேண்டுமென்றோ அல்லது தெரிந்தோ, பயங்கரவாத நிலையைத் தூண்டும் எந்தவொரு செயலையும் செய்பவர் பொதுமக்களையோ அல்லது பொதுமக்களின் எந்தவொரு பிரிவையோ அச்சுறுத்துபவர் இலங்கை அரசாங்கத்தையோ அல்லது வேறு எந்த அரசாங்கத்தையோ அல்லது ஒரு சர்வதேச அமைப்பையோ எந்தவொரு செயலையும் செய்யவோ அல்லது செய்யாமல் இருக்கவோ கட்டாயப்படுத்துபவர் அல்லது போரைப் பரப்புபவர், அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுபவர், அல்லது இலங்கை அல்லது வேறு எந்த இறையாண்மை கொண்ட நாட்டின் இறையாண்மையை மீறுபவர், பயங்கரவாதக் குற்றத்தைச் செய்பவர்" என்றும் வரையறுக்கிறது.

பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்களாகவோ, பயங்கரவாத வெளியீடுகளை ஊக்குவிப்பதற்காகவோ அல்லது பரப்புவதற்காகவோ அல்லது பயிற்சி அளித்ததற்காகவோ குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டவர்களுக்கு பதினைந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும் பதினைந்து மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்படும்.

நியாயமான சந்தேகத்தின் பேரில் நபர்களை 'நிறுத்தி சோதனையிடவும்', சந்தேக நபர்களிடமிருந்து பொருள்களைப் பறிமுதல் செய்யவும் இராணுவ வீரர்களுக்கு அதிகாரம் உள்ளது என்று 64 பக்க சட்ட மூலம் கூறுகிறது.

ஒரு சந்தேக நபர் காவலில் எடுக்கப்பட்டவுடன், அத்தகைய கைதுகள் குறித்து 24 மணி நேரத்திற்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்திற்கும் பொலிஸ் மா அதிபருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

இந்த ஏற்பாடு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து இரண்டு மாதங்களுக்குரிய தடுப்புக்காவல் உத்தரவை பொலிஸ் மா அதிபர் அல்லது பிரதிப் பொலிஸ் மா அதிபர் பெறுவதற்கு உதவுகிறது.

கைது செய்யப்பட்டதிலிருந்து ஒரு வருடம் வரை தடுப்புக்காவல் உத்தரவையைப் புதுப்பித்து நீடிக்க முடியும் என்று சட்ட மூலத்தில் கூறப்பட்டுள்ளது.

---

## புயலுக்கு...

மையம் இந்த தகவலை வழங்கியுள்ளது.

அதேநேரம், 184 பேர் இன்னும் காணவில்லை என்று மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, பேரனர்த்தத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்த அனர்த்தத்தினால் 3 லட்சத்து 91 ஆயிரத்து 401 குடும்பங்களைச் சேர்ந்த 13 லட்சத்து 64 ஆயிரத்து 481 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கணிக்கப்பட்டுள்ளது.



# வடக்கு – கிழக்கில் மீண்டும் மழை?

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கன மான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஒரு சில இடங்களில் மிகக் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை தலைவர் பேராசிரியர் நா. பிரதீபராஜா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று (அதாவது நேற்று) முதல் எதிர் வரும் 16 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வானிலை சீரான நிலைமையில் காணப்படும்.

எனினும் ஒரு சில பகுதிகளில் அவ்வப் பொழுது மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. அதே போல மத்திய, ஊவா, சப்ரகமுவ, தெற்கு மற்றும் மேற்கு மாகாண பகுதிகளில் அவ்வப்பொழுது மழை கிடைக்கும் சாத்தியமுள்ளது.

அதேவேளை எதிர்வரும் 16 ஆம் திகதி தென்கிழக்கு வங்காள விரிகுடா வில் சிறிய அளவிலான காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இதனால் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கன மான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஒரு சில இடங்களில் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் வடக்கு,கிழக்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்திய, மாகாணங்களில் கன மழை கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மத்திய மற்றும் ஊவா மாகாணங்க ளில் தொடர்ச்சியாக மழை கிடைத்து வருகின்றது. இதனால் சில இடங்க ளில் நிலச்சரிவு நிகழ்வுகளும் பதிவாகி யுள்ளன.

இந்த நிலைமையில் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை இப்பிரதேசங்களிலும் கன மழைக்கு வாய்ப்பும் உள்ளது. எனவே இந்த நாள் களிலும் நிலச்சரிவைத் தூண்டும் கன மழை கிடைக்கும் என்பதனால் மக்கள் நிலச்சரிவு தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

நிலச்சரிவு அபாயத்தின் காரணமாக வெளியேற்றப்பட்டு தற்போது பாதுகாப் பான இடங்களில் உள்ள மக்கள் மேற் குறிப்பிட்ட இந்த நாள்களிலும் பாதுகாப் பான இடங்களில் இருப்பதே சிறப்பு.

இன்றைய நிலையில் நாட்டின் பல பிரதேசங்களிலும் உள்ள பெரும் பாலான நீர்த்தேக்கங்கள் வான் பாய்கின் றன.

இந்த டிசம்பர் மாதம் முடியும் வரை யில் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அதிலும் குறிப்பாக 16 முதல்19 மற்றும் 23 முதல் 29 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் மழை கிடைக் கும் வாய்ப்புள்ளது.

ஆகவே நீர்த்தேக்கங்களின் நிர்வா கத்தோடு தொடர்புடையவர்கள் இந்த மழை நாள்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவது சிறந்தது.

அத்தோடு தற்பொழுது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் நிலவுகின்ற குளிரான வளிமண்டல நிலைமை எதிர்வரும் 16 ஆம் திகதி வரைக்கும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே மக்கள் இது தொடர்பாகவும் விழிப்பாக இருப்பது அவசியம். – என்றார் அவர்.

இதே சமயம் வளிமண்டலவியல் திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

பிற்பகல் 1.00 மணிக்குப் பிறகு நாட்டின் பிற பகுதிகளில் பல இடங்க ளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவு களிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், திரு கோணமலை, ஹம்பாந்தோட்டை மற் றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது 30 முதல் 40 கி.மீ வேகத் தில் பலத்த காற்று வீசக்கூடும்.

சப்ரகமுவ, மத்திய மாகாணங் களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட் டங்களிலும் அதிகாலை நேரங்களில் மூடுபனியுடன் கூடிய வானிலை எதிர் பார்க்கப்படலாம்.

மேலும், இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக உள்ளூர் மயமாக்கப்பட்ட பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கத்தால் ஏற்படும் சேதங் களைக் குறைக்க போதுமான முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குப்பைப் பிரச்சினை

டித்வா புயல் தன்னுடைய கைவரிசையை இலங்கையின் மீது முழுமையாகக் காட்டிவிட்டுப் போய்விட்டது. அந்தப் பேரிழப்புக்களில் இருந்து மீண்டெழும் தளரா முயற்சியில் நாடு ஈடுபட்டிருந்தாலும், அந்த விடயத்தை ஒட்டிப் புதிது புதிதாகப் பல சிக்கல்கள் உருவாகி வருகின்றன.

புயல் புரட்டிப் போட்ட பிரதேசங்களை மீளமைப்பதில் முதல் சிக்கல் புயல் ஏற்படுத்திய குப்பை கூளங்கள், கஞ்சல்கள், உணவுக் கழிவுகள், பழைய காகிதங்கள், அட்டைகள், பிளாஸ்டிக் பொருள்கள், உலோகங்கள், ஆடைகள், கண்ணாடிப் பொருள்கள், கட்டட எச்சங்கள் மற்றும் பொதுத் திடக் கழிவுகளை அகற்றுவது தொடர்பான பிய்ச்சல் பிடுங்கல்தான்.

புயல் மோசமாகப் பாதித்த பல இடங்களில் இவை ஆங்காங்கே மலை போல குவிந்து கிடக்கின்றன. காடு மேடுகள், களனிகள் எனப் பல இடங்களில் இருந்தும் கழிவுகளைக் கொண்டு வந்து ஆங்காங்கே அள்ளிப் போட்டுவிட்டுச் சென்றிருக்கின்றன புயலும் மழை வெள்ளமும். இவற்றை அகற்றுவதுதான் - சரியான முறையில் அகற்ற நடவடிக்கையை மேற்கொள்வதுதான் - பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. சூழல் பாதுகாப்பு விடயத்தைக் கருத்தில் கொண்டு இந்த விகாரத்தை கையாள வேண்டி இருக்கின்றது.

இதனை ஒட்டி கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை ஆகியவை சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கோடு உரிய அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தாலும் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பின்னணியில் கிடைக்கின்ற வசதிகளை வைத்து அந்த அறிவுறுத்தல்களை புறக்கணிக்கும் விதத்தில் - சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தும் வகையில் - கழிவுகள் அப்புறப்படுத்தப்படுகின்றன என்று செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

அதிகம் பாதிக்கப்பட்ட கம்பளை நகர சபை பிரதேசத்திற்கு கிழக்கிலிருந்து முஸ்லிம் தலைவர்கள் கழிவகற்றும் உபகரணங்கள், தொழிலாளர்கள், வாகனங்களோடு படையெடுத்தமை பலருக்கும் நினைவிருக்கலாம். இப்போது கம்பளையிலிருந்து கணிசமான அளவு குப்பைகள் அகற்றப்பட்டு விட்டன. ஆனால், அவை எங்கே கொட்டப்பட்டன என்ற கேள்வி எழுகின்றது.

சிலாபம் நகர சபையின் குப்பை டிராக்டர்கள் பிளாஸ்டிக், மருத்துவமனை கழிவுகள், இடுபாடுகள் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வரும் குப்பைகளை முக்கிய சதுப்பு நிலத்தில் கொட்டுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஏற்கனவே புயலினால் பாதிக்கப்பட்டுள்ள ஆறுகள், கால்வாய்கள், அவற்றில் தேங்கியுள்ள குப்பைகள் சுத்தம் செய்யப்பட வேண்டி இருக்கின்ற பின்னணியில், அவற்றில் புதிதாகக் குப்பைகள் கொட்டப்படுகின்ற தகவல்களும் வெளி வருகின்றன.

பல இடங்களில் இரசாயனக் கழிவுகள் முறையான கையாளுகை இன்றி அகப்பட்ட இடங்களில் கொட்டப்படுவதான குற்றச்சாட்டும் ஆங்காங்கே எழுகிறது. பல இடங்களில் கடற்கரை ஓரங்கள், ஆறுகள் கடலோடு கலக்கும் பிரதேசங்கள் போன்றவற்றிலும் குப்பைகள் தேங்கி நின்று புதிய சுற்றுச் சூழல் பிரச்சனைகளை உருவாக்கும் போக்குத் தென்படுகின்றது.

புயலுக்குப் பின்னரான குப்பைகளை அகற்றும் விவகாரம் பெரும் இமாலயப் பிரச்சினையாக விஸ்வரூபம் எடுக்கக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன.

நெருக்கடியில் இருந்து மீண்டெழ முற்படும் நாடு இதுபோன்ற பல புதிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி இருப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

ஒன்றாக
முன்னோக்கி



# ஆபாச படம் காட்டி சிறுமியை பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுத்திய தந்தை உட்பட 5 பேருக்கு விளக்கமறியல்

**(பாறுக் ஷிஹான்)**

ஆபாச படம் காண்பித்து தனது சொந்த மகளை வன்புணர்வு செய்த தந்தை உட்பட ஏனைய 5 சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய 3 சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்ய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை சம்மாந்துறை நீதிவான் ஜே.பீ ஏ.ரஞ்சித்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தந்தை உட்பட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 26 ஆந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன் அன்றைய தினம் சந்தேக நபர்களான தந்தை, தாய் தவிர ஏனைய 4 சந்தேக நபர்களையும் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் பணித்துள்ளார்.

இதே வேளை இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 12 வயதான சிறுமி கல்முனையில் உள்ள வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### நடந்தது என்ன?

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புற நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சுமார் 5 மாத காலமாக திரைமறைவில் விபசார நடவடிக்கை ஒன்று இடம்பெற்று வந்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 தொலைபேசி ஊடாக அப்பகுதியில் இருந்த சிறுவர் பெண்கள் தொடர்பான அமைப்பு ஒன்று வழங்கிய தகவலின் படி துரிதமாக செயற்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நிந்தவூர் பொலிஸார் மற்றும் அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் பொலிஸ் பிரிவு அதிகாரிகளிடம் சம்பவம் குறித்து அறிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட சிறுமியை நிந்தவூர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்த அம்பாறை மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகளிடம் நடந்த அனைத்தையும் குறித்த சிறுமி கூறியுள்ளார்.

பொருளாதார சிரமம் காரணமாக 12 வயது மதிக்கத்தக்க தனது மகளை முதலில் ஆபாச படம் பார்த்து வன்புணர்வு செய்த தந்தை பின்னர் சம காலத்தில் ஏழு பேருக்கு விபசார செயலுக்காக மகளை ஈடுபடுத்தியுள்ளமையும் மற்றும் இந்த செயலுக்கு சிறுமியின் தாயார் உடந்தையாக இருந்து வந்தமையும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தந்தை உட்பட 5 பேரை தற்போது கைது செய்துள்ள பொலிஸார் தலைமறைவாகிய ஏனைய 3 சந்தேக நபர்களைத் தேடி வருகின்றனர்.

இச்சம்பவத்தில் அச்சிறுமியிடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி முதலில் தந்தை கைது செய்யப்பட்டார். பின்னர் சாய்ந்தமருது, சம்மாந்துறைப் பகுதியில் அச்சிறுமியை பணத்திற்கு வாங்கி வன்புணர்ந்த 04 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் 52, 41,24,40 வயதிற்குட்பட்ட பலதார திருமணம் செய்த சந்தேக நபர்களாவர்.மேலும் தந்தை சுமார் 05 மாத காலமாக தனது மகளை பல்வேறு நபர்களுக்கு விற்று வந்ததார் என்பதும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.இது தவிர இச்சம்பவத்தில் தலைமறைவான ஏனைய மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்ய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

### விபசாரம் ஆரம்பம்

அம்பாறை மாவட்டத்தின் மாளிகைக்காடு பகுதியில் வசித்து வந்த ஐவர் கொண்ட இக்குடும்பம் பொருளாதார நிலைமை காரணமாக அவ்விடத்தில் இருந்து குடிபெயர்ந்து அருகில் உள்ள மற்றுமொரு ஊரான நிந்தவூர் பகுதியில் உள்ள புறநகரில் வாடகை அடிப்படையில் வீடொன்றை பெற்று வாழ்ந்து வந்தனர்.இக்குடும்பத்தில் 18 வயது ஆண், 12 வயது பெண் பிள்ளை மற்றும் 5 வயது ஆண் பிள்ளையும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 18 வயது ஆண் பிள்ளை உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்து தனியார் கல்வி நிலையம் ஒன்றின் ஊடாக கல்வி கற்று வருகின்றார். இச்சம்பவத்தில் 12 வயதான பெண் பிள்ளையே பாதிக்கப்பட்டவராவார். சிறுமியின் தந்தை கடற்தொழில் செய்பவர் ஆவார்.தந்தைக்கு 40 வயது என்பதுடன் தாய்க்கு 36 வயதாகும். ஆரம்ப காலத்தில் தந்தையுடன் தொழில் உறவில் இருந்தவர்கள் பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயுடன் முறைகேடான தொடர்புகளை தந்தையின் சம்மதத்துடன் ஏற்படுத்தி கொண்டுள்ளனர. என்றும் கூறப்படுகின்றது.

இத்தொடர்புகள் தங்களது வசதியின்மையை காரணம் காட்டி பொருளாதார நன்மைக்காகவே மேற்கொள்ளப்பட்டன அவர்கள் தெரிவித்த போதிலும் மாளிகைக்காட்டில் இருந்து ஆரம்பமாகி பின்னர் வாடகை வீடு அமைந்துள்ள நிந்நவூர் வீட்டிலும் இது தொடர்ந்தது.

பின்னர் தான் குடும்பத்தில் இருந்த 12 வயது மதிக்கத்தக்க சிறுமியும் ஆபாசப்படம் காண்பிக்கப்பட்டு தனது தந்தை மூலம் வன்புணர்வு செய்யப்பட்டுள்ளார். பின்னர் ஏனைய சந்தேக நபர்களுக்கும் சிறுமி பணத்திற்காக விற்கப்பட்டுள்ளார்.இச்செயற்பாடுகள் தாயின் இணக்கத்துடன் நடைபெற்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இதன் போது வாடிக்கையாளர் ஒவ்வொருவரிடம் இருந்தும் 20 ஆயிரம், 10 ஆயிரம், 2 ஆயிரம் ரூபா என பணம் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு வராது என்கின்றார் லால் காந்த



அனர்த்தம் காரணமாக எதிர்காலத்தில் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியமில்லை என விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

சில அரிசி வகைகளை பயிரிடும் அளவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவே சில சந்தர்ப்பங்களில் அரிசியை இறக்குமதி செய்ய நேரிட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், 'மீண்டெழுவது குறித்த பாரிய அனுபவம் விவசாய மக்களுக்கே உள்ளது. விவசாய மக்கள் இந்த அழிவின் போதும் மீண்டும் எழுவார்கள் என்பது குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த அழிவு ஏற்பட்டாலும் விவசாயிகள் மீண்டும் பயிரிடுவார்கள். அதில் பிரச்சினையில்லை. ஆனால் விதை நெல் பிரச்சினை வரக்கூடும் என்றே எமது மனதில் முதலில் தோன்றியது.

ஆனால் விதை நெல் குறித்து எங்கும் பேச்சுக்களே இல்லை. அதனால் எதிர்காலத்தில் அரிசி பிரச்சினை வருமென யாராவது நினைத்துக் கொண்டிருந்தால் அவ்வாறான பிரச்சினை எதுவும் இல்லை.

பயிரிடப்படும் அளவுகளில் உள்ள மாற்றங்கள் காரணமாக சில வகைகளை வெளிநாட்டிலிருந்து கொண்டு வர வேண்டியுள்ளது.

கடந்த நாள்களில் நாம் கீரி சம்பாவை குறிப்பிட்டளவு இறக்குமதி செய்தோம்.

கீரி சம்பா பயிரிடப்படும் அளவு குறைந்ததாலேயே அதனை இறக்குமதி செய்ய நேரிட்டதே தவிர நாட்டில் அரிசி தட்டுப்பாடு நிலவுவதால் அல்ல - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.








# அன்ரன் பாலசிங்கத்தின் நினைவேந்தல் வடமராட்சியில் இன்று இடம்பெற்றது!

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலில் இன்று முற்பகல் 10:30 மணியளவில் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் மிகவும் எழுச்சி கரமாகவும் உணர்வு பூர்வமாக வும் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தலானது ஜனநா யக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத்தலைவரும் ஜனநாயக போரா ளிகள் கட்சித் தலைவருமான வேந்தன் தலைமையில் ஈகைச்சுடர் ஏற்றி ஆரம் பிக்கப்பட்டது.

பின்னர் சிறிது நேர மௌன அஞ்ச லியைத் தொடர்ந்து ஜனநாயக போராளி கள் கட்சியின் நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களால் மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலிகள் செலுத் தப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஜனநா யக போராளிகள் கட்சியின் முக்கியஸ்தர் களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் பொதுமக்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சி உறுப்பி னர்கள் பொது மக்கள் இளைஞர்கள் சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# கற்பிட்டி பிரதேச செயலகத்தில் அரசின் அனர்த்த நிவாரண உதவி

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

டித்வா சூறாவளி மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசின் நிவாரண உதவித்திட்டம் வழங்கும் நடவடிக்கைகள் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் 31 கிராம சேவகர் பிரிவுகளிலும் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கற்பிட்டி பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிய தர்ஷினி தலைமையின் கீழ் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சுமார் 8743 குடும்பங்கள் இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான அரசின் நிவாரண நிதி உதவி வளங்களின் முதற்கட்டமாக 25 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மூன்று வகுப்பினராக இனம் காணப்பட்டு இந்த 25 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படுகின்றது.

அதன்படி முழுமையாக வீடு பாதிக்கப்பட்டவர்கள், பகுதியளவில் வீடு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வெள்ள நீரில் மூழ்கியவர்கள் என்ற அடிப்படையில் அரசின் உதவிப் பணம் வழங்கப்படுகிறது. இதற்கான முதற்கட்ட நிதி உதவி 59 லட்சம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘பேஸ் புக்’ அறிவித்தல் விருந்தில் கைதான 28 பேரில் கண்டி துணை மேயரின் மகளும்

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு அருகிலுள்ள ஒரு ஹோட்டலில் நேற்று அதிகாலை நடைபெற்ற ‘பேஸ்புக் அறிவித்தல் மூலமான விருந்து’ ஒன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், போதைப் பொருட்களுடன் 28 பேரைக் கைது செய்திருந்தனர். அவர்களில் ஒருவர் தேசிய மக்கள் சக்தியின் கண்டி துணை மேயர் ருவன் குமாரவின் 26 வயது மகள் என்று கூறப்படுகின்றது.

28 பேரும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு அருகிலுள்ள ஒரு ஹோட்டலில் நேற்று சனிக்கிழமை அதிகாலையில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக பொலிஸ் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையின் போது, 4,134 மில்லிகிராம் கிரிஸ்டல் மெத் (ஐஸ்), 1,875 மில்லிகிராம் ஹாஷிஷ், 2,769 மில்லிகிராம் குஷ், 390 மில்லிகிராம் கோகோயின், 804 மில்லிகிராம் காளான்கள், 13 போதை மாத்திரைகள் மற்றும் 12 சட்டவிரோத சிகரெட்டுகள் ஆகியவற்றை பொலிஸெ பறிமுதல் செய்தனர்.

கண்டி, முல்லேரியா, ஹட்டன், பிலகல, அதுருகிரிய, கொட்டகெதர, ஹோமாகம, தொம்பே, எம்பிலிப்பிட்டிய, திருகோணமலை மற்றும் ஜா-எல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18 முதல் 31 வயதுக்குட்பட்ட 24 ஆண்கள் கைது செய்யப்பட்டனர் எனவுன், துணை மேயரின் மகள் உட்பட 21 முதல் 26 வயதுக்குட்பட்ட நான்கு பெண் சந்தேக நபர்கள் கண்டி, நீர்கொழும்பு மற்றும் பூண்டலுஓயாவைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தில் அனைத்து சந்தேக நபர்களும் ஆஜர்படுத்தப்பட்டு தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

டிசம்பர் 17ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராக அவர்களுக்கு உத்தரவிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அழிவுக்கு உள்ளான பதிவு செய்யப்பட்ட கால்நடை வளர்ப்போருக்கு நஷ்டஈடு!

## உடன் வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(வாஸ் கூஞ்ஞ)

அண்மையில் நாடு பூராகவும் இடம் பெற்ற புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தால் மன்னார் மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரமாக காணப்பட்டு வரும் பெருந் தொகையான கால்நடைகள் அழிவுக்கு உள்ளாகியுள்ளன.

கால்நடை பண்ணைகளை சட்டப்படி பதிவு செய்த நிலையில் உள்ள அழிவுக்குள்ளான பண்ணையாளர்களின் விவரங்களைத் திரட்டி உடனடியாக அவர்களுக்கான நஷ்டஈட்டை வழங்குமாறு ஜனாதிபதி அநுர திஸநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

சூறாவளி மற்றும் இதனுடன் இணைந்த வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களை உயர்நிலைக்குக் கொண்டு வருவதற்காக எடுக்கும் முயற்சிக்காக ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் செல்லும் ஜனாதிபதி அநுர திஸநாயக்க நேற்று சனிக்கிழமை மன்னாருக்கும் வருகை தந்து மன்னார் மாவட்ட செயலகத்தில் அதிகாரிகளுடன் விஷேட கூட்டம் ஒன்றை நடத்தினார்.

இதன்போது கால்நடை தொடர்பாக அந்தத் திணைக்கள அதிகாரிகளிடம் வினவியபோது, மன்னார் கால்நடை பிரதிப் பணிப்பாளரும் உற்பத்தி சுகாதார தலைவருமாகிய வின்சன்ட் ஜனாதிபதியிடம் தெரிவிக்கையில்,

மன்னாரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தால் ஆரம்பத்தில் எடுக்கப்பட்ட கணக்கின்படி 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளமை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அவ்வாறு நாலாயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள் காணாமல் போயின. விவரங்களில் இருந்தன. இதன்பின்னர் வெள்ளங்கள் வழிந்தோடிய பின்னர் பண்ணையாளர்களை சந்தித்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட விவரங்களைத் தொடர்ந்து நேற்று சனிக்கிழமைவரை 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளன. 1800 மாடுகள் தேத்தாத்தீவு என்று அழைக்கப்படும் மணல் திட்டியில் இறந்துள்ளன. அச்சங்குளம், ஊரணி பகுதியில் இருந்த மாடுகளுக்கு என்ன நடந்தது என இன்னும் தெரியவில்லை.

இவைகள் ஆற்றுத் தண்ணீரால் காவுக் கொள்ளப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுவதுடன் இவைகள் காணாமல் போயிருக்கலாம் என்று பதிவிடப்பட்டுள்ளன.

5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்துள்ளன. இந்தப் பகுதியில் கோழிப் பண்ணைகள் பெரிதாக காணப்படாத போதும் வீடுகளில் வளர்க்கப்பட்டு வந்த 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகள் இறந்துள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி இங்கு கருத்து தெரிவிக்கையில், பதிவு செய்யப்படாத கால்நடைகளுக்கு தற்பொழுது நஷ்டஈடு வழங்குவதை விடுத்து, பதிவு செய்யப்பட்ட கால்நடை பண்ணையாளர்களிடம் விவரங்களைத் திரட்டி அவர்களுக்கான நஷ்டஈடு வழங்குவதற்கான உடன் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

19ஆம் திகதிக்கு முன்னரே விவரங்களைத் திரட்டி இந்த வருடம் மூடிவதற்குள் நஷ்டஈட்டை அவர்களுக்கு வழங்கும்படி ஜனாதிபதி கட்டளையிட்டார்.

பதிவுகள் செய்யாத இழப்புக்களைச் சந்தித்த கால்நடை வளர்ப்போருக்கும் உதவி செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதிற்கு இணங்க முறைகேடுகள் நடைபெறாதிருக்க இதற்கென ஒரு குழுவை அமைத்து அதற்கான நடவடிக்கை எடுப்போம் என இங்கு ஜனாதிபதி தெரிவித்தார்.

# மன்னம்பிட்டி பாலத்தில் தொங்கும் எருமை மாடு!



(வி.ரி.சகாதேவராஜா)

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் அள்ளுண்டு சென்ற எருமை மாடு ஒன்று மன்னம்பிட்டி பாலத்தில் சிக்கி இறந்த நிலையில் தொங்கிக் கிடக்கிறது.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு அங்கு ஏற்பட்ட பெருவெள்ளத்திலே இந்த மாடு சிக்குண்டு அள்ளுண்டு செல்லும் பொழுது ரயில் செல்லும் மிக உயரத்தில் உள்ள ரயில்வே பாலத்தில் சிக்கி கொண்டிருந்தது.

நில மட்டத்தில் இருந்து இந்த ரயில்வே பாலம் சுமார் 30 அடி உயரத்தில் அமைந்துள்ளது. அங்கு மீள உதவியின்றி அது அந்த இடத்திலேயே இறந்திருக்கின்றது.

அந்த இறந்த மாடு இன்று வரைக்கும் அப்புறப்படுத்தப்படாமல் அந்தரத்தில் பாலத்தில் தொங்கி கிடக்கின்றது.

மட்டக்களப்பு பொலன்னறுவை பிரதான பாதையில் இந்த மன்னம்பிட்டி பாலம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.







# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு நிகழ்வுகள் மட்டக்களப்பில்!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான், மட்டக்களப்பு)**

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா நிகழ்வானது கல்லடி உப்போடை ஸ்ரீபேச்சியம்மன் ஆலய முன்றலில் இருந்து விபுலானந்த அடிகளாரின் திருவுருவ பண்பாட்டு பவனியுடன் ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து சுவாமி விபுலானந்த அடிகளாரின் சமாதியில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ மு.கு. சச்சுதானந்த குருக்களால் மலர்மாலை அணிவித்து மங்களாராத்தி நிகழ்த்தப்பட்டது.

பின்னர் சிவானந்தா தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் உதவி மாவட்ட அரச அதிபர் ஜீ.பிரணவன் தலைமையில் மாவட்ட இந்து கலாசார பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பிரதான நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் மற்றும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்ட இந்துகலாசார திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் கே.திலகநாதன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெட்ணம், மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சிறப்பு அதிதிகள் பலரும் மலர் மாலை அணிவிக்கப்பட்ட வரவேற்கப்பட்டனர் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றப்பட்டு தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமாகின.

இதன்போது சுவாமி விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சிக் கூடம் அதிதிகளினால் நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்



கழக மாணவர்களின் வரவேற்பு நடனம் மற்றும் அறநெறி பாடசாலைகளின் மாணவர்களின் கதாபிரசங்கம் உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. நூற்றாண்டை முன்னிட்டு தபால் திணைக்களத்தால் அச்சிடப்பட்டுள்ள தபால் உறை வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூற்றாண்டை முன்னிட்டு திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டிகள் மற்றும் தேசிய, மாகாண, மாவட்ட மட்டங்களில் நடத்தப்பட்ட போட்டிகளிலும் பங்கேற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. அதிதிகளின் உரைகளும் இடம் பெற்றன.





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் நிவாரணப் பணி!

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட – சங்கானை பிரதேச செயலக நிர்வாகத்தில் உள்ள, அராலி கிழக்கு, அராலி மத்தி கிராமத்தில் 76 குடும்பங்களுக்கும், காட்டுப்புலம், பாண்டவட்டை கிராமத்தில் 55 குடும்பங்களுக்கும் 524,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வியாழக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.












# டெங்கு நுளம்பு பெருகுவதற்கான சூழ்நிலை காணப்பட்டால் வழக்குத் தொடுக்க அனுமதி

உயிர்கொல்லி நோயான டெங்கு கிண்ணியாவில் ஓர் அனர்த்தமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு வளருவதற்கான வாய்ப்பான சூழலை வைத்திருப்போர் எவராக இருந்தாலும் அவர்கள் மீது நீதிமன்றத்தில் உடனடியாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு கிண்ணியா நகர சபையின் தவிசாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதற்கான அதிகார கையளிப்பை செய்திருக்கிறேன் என கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

வீட்டு உரிமையாளர்கள், கடை உரிமையாளர்கள், நிறுவனத் தலைவர்கள், காணி உரிமையாளர்கள் அனைவரும் இதற்குப் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எமது கவனக்குறைவால் இன்னொருவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை அங்கிகரிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




# 2025 டித்வா சூறாவளி: இலங்கையின் மனித இழப்பு சர்வதேசப் பங்களிப்பு...!

2025 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கக் கடலில் உருவான 'டித்வா' (Ditwah) சூறாவளியானது, பல வருட பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரப் போராடும் இலங்கையின் மீது மிக மோசமான இயற்கை அனர்த்தமாகத் தனது தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் புயல் குறுகிய காலத்தில் வரலாறு காணாத கனமழை, வெள்ளம் மற்றும் கொடூரமான மண் சரிவுகளைத் தூண்டி, நாட்டின் பல பாகங்களில் மனித உயிர்கள், விவசாயம் மற்றும் அத்தியாவசிய உள்கட்டமைப்பைச் சீர்குலைத்தது. டித்வாவின் தாக்கம், வெறும் தேசியப் பிரச்சினையாக நிற்காமல், சர்வதேச மனிதாபிமான உதவியை இலங்கை நாட வேண்டிய ஒரு இக்கட்டான நிலையை உருவாக்கியது.

1.அனர்த்தத்தின் தாக்கம் மற்றும் சேதப் புள்ளி விவரங்கள்

டித்வா புயல் இலங்கையின் 22 மாவட்டங்களைத் தாக்கியது. இதில் குறிப்பாக சப்ரகமுவ, மேல், மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, உயிரிழப்புகள் மற்றும் பொருள் சேதங்களில் உச்சத்தைத் தொட்டன.

**மனித இழப்பு மற்றும் பொதுத் தாக்கம்:**

– விபரம் – மொத்த எண்ணிக்கை (மேலோட்டமான மதிப்பீடுகள்)

– உயிரிழப்புகள் – 600 இற்கும் மேற்பட்டோர்.

– காணாமல் போனோர் – 190 இற்கும் மேற்பட்டோர்.

– மொத்தம் பாதிக்கப்பட்ட நபர்கள் – 20,00,000 இற்கும் மேற்பட்டோர்.

– பாதிக்கப்பட்ட குடும்பங்கள் – 6,11,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள்.


– முகாம்களில் தங்கவைக்கப்பட்டோர் – 1,00,000 இற்கும் அதிகமான மக்கள் ;

இந்தப் புள்ளிவிவரங்கள் டித்வா புயலின் நேரடி மனித இழப்பின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன. பெரும்பாலும் நிலச்சரிவுகளில் சிக்கியதாலும் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்), வெள்ளத்தில் மூழ்கியதாலும் (மேல் மாகாணம்) உயிரிழப்புகள் நிகழ்ந்தன.

2. பாதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு சேதம் புயலின் தாக்கம் ஒவ்வொரு மாகாணத்திலும் மாறுபட்ட தீவிரத்துடன் காணப்பட்டது:

- சப்ரகமுவ மாகாணம் (இரத்தினபுரி, கேகாலை) – நிலச்சரிவு அபாயம் நிறைந்த இந்தப் பகுதிகளில் ஏற்பட்ட திடீர் மற்றும் பாரிய நிலச்சரிவுகளால் மிக அதிக உயிர்ச் சேதங்கள் பதிவாகின. கிராமங்கள் முழுமையாகப் புதையுண்டதால், மீட்புப் பணிகள் மிகக் கடினமான சவாலை எதிர்கொண்டன.
- மத்திய மாகாணம் (கண்டி, பதுளை) – தேயிலைத் தோட்டப் பகுதிகளிலும், மலைப்பாங்கான பகுதிகளிலும் ஏற்பட்ட மண் சரிவுகள் மற்றும் வெள்ளம் விவசாய உள்கட்டமைப்பைப் பாதித்தன.

தொடர்ச்சி...




# 2025 டித்வா சூறாவளி: இலங்கையின் மனித இழப்பு சர்வதேசப் பங்களிப்பு...!

தொடர்ச்சி...

இதன் காரணமாக பதுளை மாவட்டத்தில் மட்டும் அதிக உயிரிழப்புகள் பதிவாகின.

• மேல் மாகாணம் (கொழும்பு, கம்பஹா) – கொழும்பு நகரின் புறநகர்ப் பகுதிகளான வெல்லம்பிட்டி, கடுவேலா போன்ற தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி, நகர்ப்புற வாழ்வை முழுமையாக முடக்கியது.

• கிழக்கு மாகாணம் (திருகோணமலை, மட்டக்களப்பு) – உள்கட்டமைப்பு மற்றும் விவசாய நிலங்கள் சேதமடைந்தன. இங்குள்ள 221 பாடசாலைகள் பாதிக்கப்பட்டு, கல்விச் செயல்பாடுகள் தடைப்பட்டன.

• வடக்கு மாகாணம் (முல்லைத்தீவு) – இங்குள்ள நாயாறு மற்றும் வட்டுவாகல் போன்ற கடலோர மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள், புயல் காற்று மற்றும் வெள்ளத்தின் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் கடல் நீர் உட்புகுதல் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வெள்ளம் நிரம்பியதால், மீனவர்களின் வீடுகள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் படகுகள் சேதமடைந்தன.

இதுமட்டுமல்லாமல், நாட்டின் முக்கிய இணைப்புப் பாலங்களான மாத்தளை மொரகஹகந்த பாலம் போன்ற கட்டமைப்புகளும், ரயில்வே மற்றும் வீதிகளும் சேதமடைந்தன. இதன் காரணமாக சுமார் 4,070 இற்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும், ஒரு லட்சத்துக்குமான அதிகமான வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தன.

3.உலக நாடுகளின் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பங்களிப்பு

டித்வாவின் பேரழிவிலிருந்து மீள, சர்வதேச சமூகம் இலங்கைக்கு உடனடியாக உதவிக் கரம் நீட்டியது.

• இந்தியா (Operation Sagar Bandhu) – அண்டை நாடு என்ற முறையில், இந்தியா உடனடியாக இராணுவ உதவியை வழங்கியது. இந்தியக் கடற்படைக் கப்பல்கள் மற்றும் விமானப்படை மூலம் மீட்புக் குழுக்கள், மருத்துவர்கள், 12 டன்னுக்கும் அதிகமான அவசரகால நிவாரணப் பொருட்கள், குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் உடனடியாகக் கொழும்பில் வழங்கப்பட்டன.

•நிதி உதவிகள் மற்றும் பொருட்கள் – சீனா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் கணிசமான நிதி உதவிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கின. இந்த உதவிகள் பாதிக்கப்பட்ட 20 லட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

• சர்வதேச அமைப்புகளின் ஒருங்கிணைப்பு: ஐக்கிய நாடுகள் சபை (UN) மனிதாபிமான உதவிகளை ஒருங்கிணைத்துஇ நிதி திரட்டும் அவசரகால வேண்டுகோளை விடுத்தது. உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) ஆகியவை மறுசீரமைப்பு மற்றும் உறுதியான உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்தன.

4. முடிவுரை மற்றும் எதிர்காலப் பார்வை

'டித்வா' புயல் இலங்கைக்கு ஏற்படுத்திய மனித மற்றும் பொருள் இழப்புகள் அதன் மீட்சியைக் கடுமையாக்கியுள்ளன. இருப்பினும், இந்த நெருக்கடியான நேரத்தில் கிடைத்த சர்வதேச உதவிகள், மனித நேயத்தின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றன. பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தின் நாயாறு மற்றும் வட்டுவாகல் முதல் தென் மாகாணம் வரை ஏற்பட்ட சேதங்கள், காலநிலை மாற்றத்தின் அச்சுறுத்தலை உணர்த்துகின்றன. இலங்கையானது, எதிர்காலத்தில் இத்தகைய தீவிர நிகழ்வுகளை எதிர்கொள்ள, காலநிலை உறுதியற்ற தன்மைக்கான (Climate Resilience) தொழில்நுட்ப உதவிகள், ஆரம்ப எச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் சர்வதேச காலநிலை இழப்பீடு நிதியுதவி ஆகியவற்றின் மூலம் சர்வதேச சமூகத்தின் நிரந்தர ஆதரவைப் பெறுவது அத்தியாவசியமாகும்.



**அம்சன் கிருஸ்ணா,**
ஊடகக்கற்கைகள் துறை,
3ஆம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.





# ஆனையிறவில் 140 குடும்பங்களுக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான உதவி!

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக்கழகம் ஊடாக ஆனையிறவுப் பகுதியைச் சேர்ந்த 140 குடும்பங்களுக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது குடும்பம் ஒன்றுக்கு 8 ஆயிரம் ரூபா பெறுமதியான நிதியுதவி மற்றும் உலருணவுப் பொதி ஆகியன வழங்கப்பட்டன.

சதாசிவம் இரத்தினசிங்கம் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சந்தனவெட்டைக் கிராம மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் விநியோகம்



(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சந்தனவெட்டை கிராமத்தில், திருகோணமலை கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம் – சார்பில்நேற்று நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்கீழ் சந்தனவெட்டை கிராமத்தைச் சேர்ந்த 122 குடும்பங்களுக்கும், அயல் கிராமங்களைச் சேர்ந்த 05 கிராம குடும்பங்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் 3,250 ரூபா பெறுமதியுள்ள நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

நிவாரணப் பொதிகளில் 10 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு, ஒரு கிலோ சீனி, சோயா மீற் மற்றும் 150 கிராம் தேயிலை ஆகியவை அடங்கியிருந்தன.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் தலைவரும் கிழக்கு மாகாண இணைப்பாளருமான சுந்தரமூர்த்தி தீபராஜ் தலைமையில் உறுப்பினர்களான டிலக்சன், சு. சயனராஜ், செ.ரேகா, அ.லோஜி ஆகியோரும், சமூக செயற்பாட்டாளர்களான இராசதுரை, ஓய்வு நிலை அதிபர் சிறிதரன் மற்றும் ரபிசன் ஆகியோரும் பங்குபற்றினர்.



பயனாளி தெரிவு மற்றும் நிவாரணப் பொருள்கள் விநியோக ஏற்பாடுகள் சந்தனவெட்டை கிராம அபிவிருத்தி சங்கம் மூலம் மேற்கொள்ளப்பட்டன. நிதி உதவி கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம் ஊடாக இடம் பெற்றது.

கிராம சேவையாளர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்புடன் இந்த நிவாரணப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

இந்த நிவாரண உதவி கிராமத்தில் உள்ள அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.இதில் கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர், கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

# ராகுலுடன் தமிழக காங்கிரஸின் நிர்வாகிகள் நாளை ஆலோசனை



தமிழகத்தில் தேர்தல் கூட்டணி தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாட்டை உறுதி செய்ய, தமிழகம் – புதுச்சேரி காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகளுடன் ராகுல் காந்தி டில்லியில் நாளை ஆலோசனை நடத்துகிறார்.

இதுகுறித்து காங்கிரஸ் மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியபோது,

"தமிழகத்தில் தி.மு.கவுடன் கூட்டணி என்று உறுதியான நிலையில், த.வெ.க. தலைவர் விஜய்யை ராகுல்காந்தியின் நெருங்கிய வட்டாரத்தில் உள்ள பிரவீன் சக்கரவர்த்தி நேரில் சந்தித்து பேசியுள்ளார்.

'விஜயை சந்தித்தது கூட்டணி குறித்து பேசுவதற்காக இல்லை' என்று பிரவீன் சக்கரவர்த்தி தெளிவுப்படுத்தி இருந்தாலும் கூட்டணி குறித்த குழப்பம் தமிழக காங்கிரஸ் கட்சியினர் இடையே நிலவுகிறது. தி.மு.கவும் சந்தேகப் பார்வையுடனே காங்கிரஸை பார்க்கிறது.

இதுகுறித்த தகவல்கள் தொடர்ந்து தலைமைக்கு தெரிவிக்கப்பட்டும் வந்தது. அதனடிப்படையில், தமிழகம்– புதுச்சேரியை சேர்ந்த காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகளை நாளை டில்லியில் சந்திக்க ராகுல் காந்தி நேரம் ஒதுக்கியுள்ளார்.

தமிழகத்தில் இருந்து மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை, மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், திருநாவுக்கரசர், அழகிரி, தங்கபாலு உள்ளிட்ட 21 பிரதிநிதிகள், புதுச்சேரியில் இருந்து காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம், முன்னாள் மத்திய அமைச்சர் நாராயணசாமி உள்ளிட்ட 15 பிரதிநிதிகள் ராகுலை சந்தித்து ஆலோசனை நடத்துகின்றனர்." என்றனர்.

# தேர்தல் கூட்டணி தொடர்பில் ஜனவரி 9இல் அறிவிப்போம்

## பிரேமலதா விஜயகாந்த் தகவல்

ஜனவரி 9 இல் கூட்டணி அறிவிப்பு வெளியாகும் என்றும் பொங்கலுக்கு பின் தமிழகத்தின் அரசியலுக்கு நல்ல வழி பிறக்கும் எனவும் தே.மு.தி.க . பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. இளைஞரணி செயலாளர் விஜய பிரபாகரனின் பிறந்த நாளையொட்டி சென்னை, கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் மரியாதை செலுத்தினார். இதனையடுத்து, விஜயகாந்த் நினைவிடத்தில் பொதுமக்களுக்கு பிரேமலதா விஜயகாந்த் உணவு வழங்கினார்.

இதை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பிரேமலதா விஜயகாந்த் கருத்து தெரிவிக்கையில்,

"விஜய பிரபாகரன், விமானம் தாமதம் காரணமாக இங்கு வரவில்லை. உரிய நேரத்தில் விருப்ப மனு விநியோகம் குறித்து அறிவிப்போம். கேப்டன் குருபூஜைக்கான பணிகள் நடை பெற்று வருகின்றன. உள்ளம் தேடி, இல்லம் நாடி பிரச்சாரப் பயணம் வெற்றிகரமாக 3 கட்டங்கள் நடந்து முடிந்துள்ளது.

அனைத்து இடங்களிலும் பூத் கமிட்டி அமைக்கப்பட்டு பி.எல்.ஏ-2 படிவங்களுக்கான பணிகள் முடித்து தேர்தலுக்கு தே.மு.தி.க. தயாராக உள்ளது. ஜனவரி 9ஆம் தேதி கடலூர் மாநாட்டுக்காக தே.மு.தி.க நிர்வாகிகள் தயாராகி வருகின்றனர். மாநாட்டில் ஒரு நல்ல அறிவிப்பு கிடைக்கும். தைப் பிறந்தால் வழிபிறக்கும் என்பது போல பொங்கலுக்குப் பின்னர் தமிழகத்தின் அரசியலுக்கும் நல்ல வழி பிறக்கும்.



தே.மு.தி.க. நிர்வாகிகள் உடன் தேர்தலுக்கான ஆலோசனைகள் தினந்தோறும் நடைபெற்று வருகின்றன. நிர்வாகிகள் உடன் தினமும் பேசி வருகிறோம். கப்டன் காலத்தில் இருந்தே தே.மு.திக-வுக்கு மாநிலக் கட்சிகளும், மத்தியில் உள்ள கட்சிகளும் தோழமைக் கட்சிகள் தான். தே.மு.தி.கவோடு அனைவரும் தோழமையோடும் நட்போடும் உள்ளனர். கூட்டணி குறித்தோ, யாருடன் கூட்டணி அமைப்பது என்பது குறித்து உரியநேரத்தில் நல்ல தகவலை அளிப்போம்.

கடலூர் மாநாட்டுக்குள் கூட்டணி குறித்துநல்ல முடிவு வரும். யாருடன் கூட்டணி, எந்தெந்த தொகுதிகள், எத்தனை தொகுதிகள் என்பது குறித்து ஜனவரி 9 ஆம் திகதி தெரிவிக்கப்படும். 2026 தேர்தலில் 234 தொகுதிகளும் எங்களுக்கு இலக்குதான். என்றாலும் அதிகாரபூர்வமாக தே.மு.தி.கவுடன் இதுவரை யாரும் கூட்டணிப் பேச்சுவார்த்தையைத் தொடங்கவில்லை." என்று தெரிவித்தார்.



# பா.ஜ.க. போட்டியிடுகின்ற தொகுதிப் பட்டியலுடன் அமித் ஷாவை சந்திக்கிறார் நயினார் நாகேந்திரன்

பா.ஜ.க. போட்டியிட விரும்பும் தொகுதிகளின் பட்டியலுடன் அமித் ஷாவை பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து பேசுகிறார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில், அனைத்து கட்சிகளும் கூட்டணி, தொகுதி பங்கீடுகள் குறித்து பேசி வருகின்றனர்.

இந்நிலையில், அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி அமைத்து இந்த தேர்தலை சந்திக்கிறது. இந்த கூட்டணிக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமை வகிக்கிறார். கடந்த சட்டப்பேரவை தேர்தலின் போதும், அதிமுகவுடன் கூட்டணி அமைத்து தேர்தலைசந்தித்த பா.ஜ.க 20 தொகுதிகளில் போட்டியிட்டது.

ஆனால், 4 தொகுதிகளில் மட்டும் பா.ஜ.க. வெற்றி பெற்றது. இந்நிலையில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் பா.ஜ.க. தலைமையில் கூட்டணி அமைத்து, 23 தொகுதிகளில் பா.ஜ.க. களம் கண்டது. ஆனால், ஒரு தொகுதியில் கூட பா.ஜ.க. வெற்றி பெறவில்லை. அதேநேரத்தில் பா.ஜ.கவின் வாக்கு சதவீதம் உயர்ந்தது.

தற்போது, 2026 சட்டப்பேரவை தேர்தலில், பா.ஜ.கவின் வாக்கு சதவீதத்தை முன்வைத்து, ஆரம்பம் முதலே அ.தி.மு.கவிடம் 50 தொகுதிகளை பா.ஜ.க. கேட்டு வந்தது. ஆனால், பா.ஜ.கவுக்கு அதிகபட்சமாக 25 தொகுதிகள் மட்டுமே வழங்குவதாக அ.தி.மு.கவினர் தெரிவித்ததாக தகவல்களும் வெளியானது. இந்த சூழ்நிலையில், தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ள தொகுதிகளின் பட்டியலை பா.ஜ.க. தயாரித்து வந்தது.

அந்தவகையில், 50 தொகுதிகளின் பட்டியலை பா.ஜ.க தயார் செய்திருப்பதாக கூறப்படுகிறது. அந்த பட்டியலுடன் நயினார் நாகேந்திரன் டில்லி சென்றார். இன்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்திக்கும் நயினார் நாகேந்திரன், அந்த பட்டியலை அமித் ஷாவிடம் வழங்குகிறார். குறிப்பாக, சென்னையில் அதிக தொகுதிகளில் பா.ஜ.க. போட்டியிட விருப்பம் தெரிவித்திருக்கிறது.



# அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச் சூடு: 2 பேர் மரணம், 9 பேர் காயம்

அமெரிக்காவின் ரோட் ஐஸ்லாந்து மாகாணத்தில் உள்ள பிரவுன் பல்கலைக் கழகத்தின் நேற்று சனிக்கிழமை இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் கொல லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேக நபர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

இது தொடர்பாக பிரவுன் பல்கலைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில், 2 உயி ரிழப்புகளை உறுதி செய்ததுடன், மேலும் 9 பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், பல்கலைக்கழகத்தில் உள்ள வர்கள் இயல்பு நிலை திரும்பும்வரை வெளியில் வர வேண்டாம் என்றும், துப் பாக்கிச் சூடு நடத்திய நபர் இன்னும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித் துள்ளது. இறந்தவர்கள் மற்றும் மருத் துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை அடையாளம் காணும் பணியில் காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் நடந்த துப்பாக் கிச் சூடு சம்பவம் குறித்து விசாரணைகள் தொடர்வதாகவும், எந்த சந்தேக நபரும் கைது செய்யப்படவில்லை என்றும் மேயர் பிரட் ஸ்மைலி தெரிவித்தார்.

சந்தேக நபரை கண்டறிய பிரவுன் பல்கலைக்கழக அதிகாரிகள், பிரா விடன்ஸ் நகர காவல்துறை மற்றும் எஃப்.பி.ஐ ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுவதாக அவர் கூறினார்.

மேலும், துணை பொலிஸ் தலைவர் டிமோதி ஓ"ஹாரா தனது செய்தியாளர் சந்திப்பில்,

சந்தேகத்திற்குரிய அந்த நபர் கறுப்பு உடை அணிந்த ஒரு ஆண் என்று கூறி னார். சந்தேக நபர் பிரவுன் பல்கலைக் கழக கட்டடத்திற்குள் எப்படி நுழைந்தார் என்பதை பொலிஸ் விசாரித்து வருவ தாகவும், ஆனால் அவர் ஹோப் தெரு வழியாக வெளியேறினார் என்பதை உறுதிப்படுத்தியதாகவும் அவர் கூறி னார்.

தாக்குதல் நடந்த இடத்திலிருந்து சந்தேக நபர் வெளியேறுவதைக் காட்டும் ஒரு காணொலியை விரைவில் வெளி யிட பொலிஸ் திட்டமிட்டுள்ளது, இருப்பி னும் அதில் அவரது முகம் தெளிவாகத் தெரியவில்லை.

"யாராவது அந்த நபரை ஏதேனும் ஒரு வகையில் அடையாளம் கண்டால் அது பற்றி எங்களுக்கு தெரிவிக்க வேண்டும்" என்று டிமோதி ஓ" ஹாரா கூறினார்.

இந்த ஆண்டு மட்டும் அமெரிக்கா வில் உள்ள கல்வி நிறுவனங்களில் 70 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூடு சம பவங்கள் நடந்துள்ளன.










# எச்1பி கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும்

## அமெரிக்க அரசுக்கு எதிராக வழக்கு




எச்1பி விசா கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி அமெரிக்காவின் 19 மாகாணங்களின் அரசுகள் சார்பில் மாசச்சூசெட்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா, மாசச்சூசெட்ஸ், அரிசோனா, கொலராடோ, கனெடிகட், டெலவெயர், ஹவாய், இலினொய், மேரிலேண்ட், மிக்சிகன், மினசோட்டா உள்ளிட்ட 19 மாகாண அரசுகள் சார்பில் மாசச்சூசெட்ஸ் மாகாண பெடரல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. அதில் கூறியிருப்பதாவது:அமெரிக்க அரசு சார்பில் கடந்த 1990 ஆம் ஆண்டில் எச்1 பி விசா அறிமுகம் செய்யப்பட்டது.

இதன்மூலம் அமெரிக்க நிறுவனங்கள் திறன்வாய்ந்த வெளிநாட்டு ஊழியர்களை தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தி வருகினறன. எச்1பி விசாவுக்கான கட்டணம் 1,000 டொலர் முதல் 7,500 டொலராக இருந்தது. ஆனால் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் கடந்த செப்டம்பரில் எச்1 பி விசாவுக்கான கட்டணத்தை ஒரு லட்சம் டொலராக உயர்த்தியது.

இதனால் கலிபோர்னியா உள்ளிட்ட மாகாணங்களை சேர்ந்த நிறுவனங்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளன. எங்கள் மாகாணங்களில் திறன்சார் ஊழியர்களுக்கு மிகப்பெரிய பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. கலிபோர்னியாவின் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டிருக்கிறது.

ஓராண்டில் 65,000 வெளிநாட்டினருக்கு மட்டுமே எச்1 பி விசா வழங்கப்படுகிறது. அவர்கள் தற்காலிக பணியாளர்கள் மட்டுமே. அவர்களால் அமெரிக்கர்களின் வேலைவாய்ப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது. பணிக்காலம் முடிந்த பிறகு அவரவர் சொந்த நாடுகளுக்கு திரும்பி செல்கின்றனர்.

எச்1பி விசா கட்டண உயர்வால் அமெரிக்க பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு மிகப்பெரிய பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக சிறப்பு கல்வி, இயற்பியல், வெளிநாட்டு மொழிகளை கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் வெளிநாடுகளை சேர்ந்த மருத்துவர்கள், செவிலியர்களுக்கு சுமார் 17,000 எச்1பி விசாக்கள் வழங்கப்படுகிறது. கட்டண உயர்வால் வெளிநாட்டு மருத்துவர்கள், செவிலியர்களை பணியமர்த்த முடியவில்லை. இதனால் மருத்துவமனைகளில் சுகாதாரப் பணியாளர்களுக்கு மிகப்பெரிய பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்க மக்கள் தொகையில் 18 வீதம் பேர் மூத்த குடிமக்கள் ஆவர்.

அவர்களின் மருத்துவ சிகிச்சை கேள்விக்குறியாகும் சூழல் உருவாகியிருக்கிறது. எச்1பி விசா கட்டண உயர்வால் அமெரிக்காவின் பொருளாதாரம் மட்டுமன்றி கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும்.

எனவே இந்த விசா கட்டண உயர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எச்1பி விசா பெறுவோரில் 71 சத வீதம் பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 14/12/2025

## டொரொண்டோவில் எலித் தொல்லை



C2▶



# லொறிச் சாரதிகள் இடையே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

## 3 இந்திய வம்சாவளியினர் கைது

கனடாவில் லொறி சாரதிகளுக்கு இடையே நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக 3 இந்திய வம்சாவளி சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவின் பிராம்ப்டன் நகரில் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி இரவு சுமார் 10.45 மணி அளவில் இழுவை லொறி சாரதிகள் குழுக்களுக்கு இடையே துப்பாக்கி சூடு சம்பவம் அரங்கேறியது.

மெக்வீன் டிரைவ் மற்றும் காசில்மோர் சாலை அருகே உள்ள வாகன நிறுத்துமிடத்தில் நடந்த இந்த சண்டையில் ஒருவருக்கு காயங்கள் ஏற்பட்டன.

C2▶

# லிபரல் கட்சிக்குத் தாவினார் கனடாவின் அரசியல்வாதி



ஒன்டாரியோ மாகாணத்தின் மார்கம் – யூனியன்வில் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் மைக்கேல் மா, லிபரல் கட்சியில் சேருவதாக கடந்த வியாழக் கிழமை இரவு வெளியிடப்பட்ட அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றத்தால், லிபரல்களிடம் தற்போது 171 ஆசனங்கள் உள்ளன. அதாவது பெரும்பான்மை எட்ட இன்னும் ஒரு ஆசனமே தேவைப்படுகின்றது.

கடந்த சில வாரங்களில் என் தொகுதி மக்களின் கருத்துகளைக் கேட்டு, என் குடும்பத்துடன் நாட்டின் திசை குறித்து ஆராய்ந்து, நான் பேச்சாளருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும், நான் பிரதமர் மார்க் கார்னியின் அரசாங்கக் குழுவில் சேரவுள்ளதாக அறிவித்துள்ளேன் என மைக்கேல் மா தெரிவித்துள்ளர்.

கார்னி நாட்டுக்கு தேவையான நிலைத்த, நடைமுறை அணுகுமுறையை வழங்குகிறார் என பாராட்டியுள்ளார்.

மக்கள் தினமும் கூறும் முக்கிய பிரச்சினைகளான விலை உயர்வு மற்றும் பொருளாதாரம் உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்துகின்றார் என மைக்கேல் தெரிவித்துள்ளார்.

கன்சர்வேட்டிவ்எம்.பி.டாட்டோஹெர்ட்டி கூறியதாவது, மா புதன்கிழமை இரவே கன்சர்வேட்டிவ் கிறிஸ்துமஸ் நிகழ்வில் பங்கேற்று, பியர் பொய்லிவ்ரேவுடன் படமெடுத்துள்ளார்.

ஆனால் வியாழன் இரவு, லிபரல் கட்சியின் வருடாந்திர விழாவில், மா அதிரடி வரவேற்பைப் பெற்றுள்ளார்.

# ஒன்டாரியோவில் வாகனம் மோதி மூன்று வயதுச் சிறுமி உயிரிழப்பு




ஒன்டாரியோ மாகாண கேம்பர்ஜ் நகரில், வாகனம் மோதியதில் மூன்று வயது சிறுமி உயிரிழந்த துயரச் சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த சமப்வத்தில் 31 வயது பெண் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளார். அவரின் உயிருக்கு ஆபத்தில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சிறுமியும் அந்த பெண்ணும் கேம்பர்ஜின் சீடர் ஸ்ட்ரீட் பகுதியில் வெஸ்ட்கேட் சென்டர் பிளாசா அருகே நடந்து சென்றபோது, ஒரு வாகனம் அவர்களை மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமிக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் ஏற்பட்டதுடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதும் சற்றுநேரத்தில் உயிரிழந்தார்.

விபத்துக்குப் பிறகு சில மணிநேரங்களிலேயே, மக்கள் மலர்களும் பொம்மைகளும் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

வாகனம் ஓட்டியவர் கேம்பர் ஜில் பகுதியில் வசிக்கும் 75 வயது ஆண் எனவும் அவருக்கு எந்த காயமும் இல்லை எனவும் பொலிஸ் தெரிவித்துள்ளது.

விபத்து குறித்து மேலதிக தகவல்கள், காரணங்கள் அல்லது குற்றச்சாட்டுகள் இதுவரை வெளியிடப்படவில்லை.



# டொரொண்டோவில் எலித் தொல்லை

கனடாவில் எலிகள் அதிகம் உள்ள நகரம் என்ற 'அவமானப்' பட்டத்தை டொரொண்டோ மீண்டும் தக்க வைத்துக்கொண்டது.

பூச்சி மற்றும் வனவிலங்கு கட்டுப்பாட்டு நிறுவனமான Orkin Canada நிறுவனம் வெளியிட்ட 2025-ஆம் ஆண்டுக்கான "எலிகள் அதிகம் உள்ள நகரங்கள்" பட்டியலில், 2024 ஆகஸ்ட் 1 முதல் 2025 ஜூலை 31 வரையிலான காலகட்டத்தில் செய்யப்பட்ட வீடு மற்றும் வணிக வளாக எலி ஒழிப்பு சேவைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் டொரொண்டோ முதலிடத்தைப் பிடித்தது.

ஒன்டாரியோ மாகாணத்தின் மிசிசாகா, ஒட்டாவா ஆகிய நகரங்களும் நாடு தழுவிய அளவில் முதல் 10 இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளன.

மக்கள் தொகை அதிகமுள்ள நகரங்களில்தான் எலிகளும் அதிகம் இருக்கும் என்பது ஆச்சரியமில்லை. மனிதர்களும் எலிகளும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்கிறார்கள் நாம் போடும் உணவுத் துண்டுகளே அவற்றுக்கு உணவு என ஓர்கின் கனடா அமைப்பின் உயர் அதிகாரி பெர்னி கிரேஃப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு குளிர்காலம் மிகவும் லேசாக இருந்ததால், நாடு முழுவதும் எலி பிரச்சினை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாகவும், சேவை அழைப்புகளும் பார்த்த எலி புகார்களும் கணிசமாக உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு எலிகளின் செயல்பாடு நாடு முழுவதும் பெரிதும் அதிகரித்துள்ளது.

உண்மையான எண்ணிக்கையை வெளியிட்டால் மக்கள் பயந்துவிடுவார்கள் என்பதால் அதை வெளியிடுவதில்லை என கிரேஃப் கூறியுள்ளார்.

---

**லொறி சாரதிகள்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

நீண்ட நாள் விசாரணைக்கு பிறகு, குற்றப் புலனாய்வாளர்கள் துப்பாக்கிச் சூடு சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களை வெற்றிகரமாக கண்டுபிடித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பீல் பிராந்திய பொலிஸார் 3 பேரை கைது செய்துள்ளனர், அவர்கள் மூவரும் இந்திய வம்சாவளியை சேர்ந்த லொறி சாரதிகள் என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மன்ஜோத் பட்டி, நவ்ஜோத் பட்டி மற்றும் அமன்ஜோத் பட்டி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும் நான்காவது சந்தேக நபரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

அதே சமயம் இந்த சம்பவம் தொடர்பான காணொலி காட்சிகளையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.